


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 317 | 4 Pages | 12.6.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 317 | 4 பக்கங்கள் | 12.6.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்**

**விளக்கம்:** இன்னா செய்தவரைத் தண்டித்தல் அவரே நாணும் படியாக அவருக்கு நல்லுதவி செய்து அவருடைய தீமையையும் நன்மையையும் மறந்து விடுதலாகும்.

# காலை உணவுத் திட்டம், நாளைய தமிழ்நாட்டுக்கான வலுவான அடித்தளம்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூன் 12

முதல்அமைச்சரின் காலை உணவுத்திட்டம் சிறப்பாக இருந்ததாக அரசு பள்ளி ஆசிரியர் ஒருவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருந்தார். இதற்கு எதிர்வினையாற்றி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"எந்த மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டாலும், மாவட்ட ஆட்சியர் போன்ற உயரதிகாரிகளைப் பார்த்தாலும், "உங்கள் பகுதியில் முதல் அமைச்சரின் காலை உணவுத் திட்ட உணவின் தரத்தைப் பள்ளிகளுக்குச் சென்று ஆய்வு செய்தீர்களா?" என்று நான் கேட்பது வழக்கம்!



அந்த வகையில், ஆசிரியர் ஒருவரே அதைச் செய்திருப்பது கண்டு மகிழ்கிறேன். காலை உணவுத்திட்டம் என்பது வெறுமனே மாணவர்களின் பசியைப் போக்கும் திட்டமோ, ஊட்டச்சத்தை அளிக்கும் திட்டமோ மட்டுமல்ல; நாளைய தமிழ்நாட்டுக்கான வலுவான அடித்தளம் அது!" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழக வெற்றிக் கழகத்தில் விரைவில் தொழிற்சங்கப் பிரிவு தொடக்கம்?

சென்னை, ஜூன் 12

தமிழக சட்டசபைக்கு அடுத்த ஆண்டு மே மாதம் தேர்தல் நடக்க இருக்கிறது. இந்த தேர்தலை எதிர்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராகி வருகிறது. தமிழக அரசியலில் புதிய வரவான நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகமும் தேர்தலை சந்திக்க தீவிரம் காட்டி வருகிறது.

இதற்கான முன்னெடுப்புகளை தமிழக வெற்றிக்கழகம் மேற்கொண்டுள்ளது. தற்போது கட்சியின் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டு, அதற்கான பணிகளை விஜய் முழு வீச்சில் செய்து வருகிறார். இதன்படி கட்சியின் அடுத்தக்கட்ட நடவடிக்கை மற்றும் அதிரடி திட்டங்களை த.வெ.க. தலைவர் விஜய் அடுத்தடுத்து அறிவித்து வருகிறார்.

கட்சி ரீதியாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு 120 மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டுள்ளனர். கட்சியில் புதிதாக சேருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. புதிதாக கட்சியில் சேருவதற்கு பிரபலங்கள் பலர் கட்சி தலைமை அலுவலகத்தை தொடர்பு கொண்டு வருகின்றனர்.

புதிதாக சேருபவர்களின் பின்னணி பற்றி கட்சி பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் மற்றும் நிர்வாகிகளுடன் விஜய் ஆலோசனை நடத்தி தகுதி வாய்ந்த நபர்கள் மட்டுமே கட்சியில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். குற்றப் பின்னணி இருப்பவர்கள் கட்சியில்



சேர அனுமதி இல்லை என்பதில் விஜய் உறுதியாக இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. கட்சி உள் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக பெரிய கட்சிகளைப் போல் த.வெ.க.விலும் மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வழக்கறிஞர் அணி உள்பட 28 அணிகள் ஏற்கனவே இருக்கின்றன.

இந்நிலையில் தி.மு.க., அ.தி.மு.க.வில் இருப்பது போல் த.வெ.க.விலும் தொழிற்சங்கம் தொடங்க திட்டமிடப்பட்டு உள்ளது. தொழிற்சங்கம் தொடங்குவதற்காக பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்துடன் ஆலோசனை நடத்தி வரும் விஜய் விரைவில் த.வெ.க.வில் தொழிற்சங்கம் தொடக்க விழாவுக்கான அறிவிப்பை வெளியிட இருக்கிறார்.

இதன்படி தமிழகம் முழுவதும் கட்சி ரீதியாக பிரிக்கப்பட்டுள்ள 120 மாவட்டங்களிலும் தொழிற்சங்க புதிய நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்து பலி எண்ணிக்கை மேலும் உயர்வு

விருதுநகர், ஜூன் 12

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி அருகே வடகரையில் ராஜா சந்திரசேகரன் என்பவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை செயல்பட்டு வருகிறது. இந்த பட்டாசு ஆலையில் இன்று தொழிலாளர்கள் பேன்சி ரக பட்டாசு தாயாரித்துக்கொண்டிருந்தனர். அப்போது. எதிர்பாராத விதமாக பட்டாசு ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டது. இந்த வெடிவிபத்தில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்தனர்.



தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், படுகாயமடைந்தவர்களைமீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த வெடி விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விபத்தை அறிந்த அந்த பட்டாசு ஆலையில் வேலை பார்த்து வரும் தொழிலாளர்களின் உறவினர்கள் ஆலை முன்பு திரண்டனர். இதனால் அங்கு பரபரப்பான சூழல் உருவானது. இந்த சம்பவம் தொடர்பாக பட்டாசு ஆலையின் மேற்பார்வையாளர், போர்மேன் ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

இந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கணேசன் என்பவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இதனால் வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது. இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் குழு பிரதமருடன் சந்திப்பு



புதுடெல்லி, ஜூன் 12

'ஆபரேஷன் சிந்தூர்' குறித்து விளக்குவதற்காக வெளிநாடுகளுக்கு சென்று திரும்பிய அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் குழுவினர், பிரதமர் மோடியை டெல்லியில் நேற்று சந்தித்தனர். அப்போது இந்தியாவின் ஒற்றுமையை உலகிற்கு உணர்த்தியதற்கு எம்.பி.க்கள் குழுவினருக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

காஷ்மீர்மாநிலம்பஹல்காமில்சுற்றுலாபயணிகள்மீது,பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி மக்கள் 26 பேர் பலியானார்கள். இதற்கு பதிலடியாக பாகிஸ்தானுக்கும், அந்த நாட்டில் உள்ள பயங்கரவாதிகளுக்கும் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தக்க பாடம் புகட்டப்பட்டது.

'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை பற்றியும், பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை பற்றியும் உலக நாடுகளுக்கும், நட்பு நாடுகளுக்கும் விளக்கிக்கூற, அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் அடங்கிய 7 குழுக்களை மத்திய அரசு அமைத்தது.

இந்த குழுக்களுக்கு பா.ஜனதா கட்சியின் ரவிசங்கர் பிரசாத், பைஜெயந்த் பாண்டா, காங்கிரசை சேர்ந்த சசிதரூர், ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த சஞ்சய் ஜா, சிவசேனாவைச் சேர்ந்த ஸ்ரீகாந்த் ஷிண்டே, தி.மு.க.வைச் சேர்ந்த கனிமொழி மற்றும் தேசியவாத காங்கிரசின் சுப்ரியா சுலே ஆகியோர் தலைமை தாங்கினர்.

இவர்கள் தனித்தனி குழுக்களாக அமெரிக்கா, பனாமா, கயானா, பிரேசில், கொலம்பியா, ஸ்பெயின், கிரீஸ், ஸ்லோவேனியா, லாட்வியா, ரஷியா, எகிப்து, கத்தார், எத்தியோப்பியா, தென்னாப்பிரிக்கா, சவுதி அரேபியா, குவைத், பக்ரைன், அல்ஜீரியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, டென்மார்க், இந்தோனேசியா, மலேசியா, தென் கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், அரபு நாடுகள், லைபீரியா, காங்கோ, சியரா லியோன், மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என 33க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு சென்றனர். அங்கு அந்த நாட்டு பிரதிநிதிகளை சந்தித்து இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்கினர்.

இந்தபயணம்வெற்றிகரமாக முடிந்ததும், அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் குழுவினர் இந்தியா திரும்பினர். பின்னர் அவர்கள் வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கரை சந்தித்து தங்களது பயண விவரங்கள் பற்றி கூறினர். இதையடுத்து அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் குழுவினர், பிரதமர் மோடியை சந்தித்தனர். இந்த சந்திப்பு டெல்லியில் உள்ள பிரதமரின் இல்லத்தில் நேற்று இரவு நடைபெற்றது.

அப்போது அவர்களிடம் நலம் விசாரித்த பிரதமர் மோடி, வெளிநாட்டு பயணத்தின்போது நடந்தவற்றை கவனமாக கேட்டறிந்தார். கட்சி பாகுபாடு இன்றி நாட்டின் ஒற்றுமையை அவர்கள் எடுத்துரைத்த விதத்தை பாராட்டினார். மேலும் குழுவில் இடம் பெற்று இருந்த எம்.பி.க்கள், பிரதமரிடம் அறிக்கைகளை வழங்கினர். பின்னர் பிரதமருடன் குழு புகைப்படமும் எடுத்துக் கொண்டனர். குழுவில் இடம்பெற்று இருந்த சுமார் 50 எம்.பி.க்களும் பிரதமருடன் தனியாகவும் பேசினார்கள். அவர்களை பிரதமர் தட்டிக்கொடுத்து பாராட்டினார்.

# ராகுல் காந்தியுடன் கர்நாடக முதல் மந்திரி சித்தராமையா சந்திப்பு



மைசூரு, ஜூன் 12

ஐ.பி.எல். சாம்பியன் கோப்பையை வென்ற பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணிக்கு பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் ஸ்டேடியத்தில் கடந்த 4ந்தேதி பாராட்டு விழா நடந்தது. இதில் கலந்துகொள்ள லட்சக்கணக்கானோர் திரண்டு வந்ததால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர். சிலர் கீழே விழுந்தவர்கள் மீது ஏறிச் சென்றனர். இதனால் 11 பேர் உயிரிழந்தனர்.

இந்தசம்பவத்துக்கு அரசின் பாதுகாப்பு குறைபாடே காரணம் என்பதும், அவசரம், அவசரமாக விழாவை ஏற்பாடு செய்தது தான் என்பதும் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தில் போலீஸ் கமிஷனர் உள்பட 5 போலீஸ் அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஆர்.சி.பி. அணி மார்க்கெட்டிங் மேலாளர் உள்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பாக சி.ஐ.டி. போலீசார், மாஜிஸ்திரேட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

பெங்களூரு நெரிசல் சம்பவம் கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு பெரும் தலைவலியை கொடுத்துள்ள நிலையில், கட்சி மேலிட தலைவர்களை சந்தித்து விளக்கம் அளிக்க சித்தராமையா இன்று காலை டெல்லி சென்றார். டெல்லியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி உள்ளிட்டோரை சித்தராமையா சந்தித்து பேசியுள்ளார். இந்த சந்திப்பின் போது, பெங்களூரு நெரிசல் சம்பவம் குறித்து கட்சி மேலிடத்திற்கு சித்தராமையா விளக்கம் அளித்து இருக்கலாம் என்று தெரிகிறது.

# பா.ம.க. வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவை தலைவராக பாலு தொடர்வார் என அறிவிப்பு

சென்னை, ஜூன் 12

பா.ம.க.வின் வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவை தலைவராக பாலு தொடர்வார் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவை ( Advocates Forum For Social Justice ) சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;



"பா.ம.க.வின் வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவையின் சிறப்புச் செயற்குழுக் கூட்டம் சென்னையில் இன்று (11.06.2025) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது. இதில் பேரவையின் உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்ட அங்காவலர்கள், மாவட்ட செயலாளர்கள், மாவட்ட தலைவர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த சிறப்புசெயற்குழுகூட்டத்தில்கீழ்க்கண்டதீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

திர்மானம் 1: வழக்கறிஞர்கள் சமகநீதிப் பேரவையின் தலைவாக வழக்கறிஞர் கே.பாலு தொடர்வார் புதிய நிர்வாகிகள் நியமனம்

சமூகநீதிக் காவலர் டாக்டர் ராமதாஸை நிறுவனராகக் கொண்டு 2003ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவை தமிழ்நாட்டில் சமூகநீதியை பாதுகாக்கும் வகையில் கடந்த 22 ஆண்டுகளாக மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவை தொடங்கப்பட்ட நாள் முதலாகவே, பேரவையின் அறங்காவலர்கள் குழுவால் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்கறிஞர் கே.பாலு தலைமையில் சமூகநீதிக்காக எண்ணற்ற பணிகளை பேரவை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் சமச்சீர் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தது. தமிழகத்தில் 3321 மதுக்கடைகள் உள்பட நாடு முழுவதும் தேசிய, மாநில நெடுஞ்சாலைகளில் இருந்த 90 ஆயிரத்திற்கும் கூடுதலான மதுக்கடைகளை மூடியது, மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்ட 27% இட ஒதுக்கீட்டை பாதுகாப்பதற்காக உச்சநீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தியது, 2013ஆம் ஆண்டில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ், பாட்டாளி மக்கள் கட்சியின் இன்றைய தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், மறைந்த வன்னியர் சங்கத் தலைவர் காடுவெட்டி குரு உள்பட பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பாட்டாளி சொந்தங்கள் குண்டர் சட்டம், தேசியப் பாதுகாப்பு சட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டபோது அவர்களை சட்டப் போராட்டம் நடத்தி மீட்டது, சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் நியமனத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகமான வன்னியர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைப்பதற்காக போராடியது என வழக்கறிஞர் கே.பாலு தலைமையில் வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவை படைத்த சாதனைகளை எண்ணி இந்த செயற்குழு பெருமிதம் கொள்கிறது.

இப்பணிகளுக்காக பேரவையின் தலைவர் வழக்கறிஞர் கே.பாலுவை டாக்டர் ராமதாஸ், டாக்டர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் பலமுறை பாராட்டியதுடன், பாராட்டு விழாக்களையும் நடத்தியதை இந்த சிறப்பு செயற்குழுக் கூட்டம் மிகுந்த நன்றியுடன் நினைவு கூர்கிறது. அறக்கட்டளைகள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டிருக்கும் வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவையின் பதிவு ஆவணத்தின் விதி எண் 17(e)இன்படி பேரவையின் தலைவரையும், விதி எண் 17(1)இன்படி பிற நிர்வாகிகளையும் நியமிக்க முடியும். தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகளை ஏதேனும் காரணத்திற்காக இடைநீக்கம் செய்ய வேண்டும் என்றால், 17(g) இன்படி மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையுடன் பேரவையின் அறங்காவலர்கள் குழு கூடித் தான் தீர்மானிக்க முடியும்.

வேறு எந்த வழிகளிலும் பேரவையின் தலைவரை பதவி நீக்கம் செய்ய முடியாது. அந்த வகையில் வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவையின் தலைவராக அறங்காவலர்கள் குழுவால் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்ட வழக்கறிஞர் கே.பாலு அறங்காவலர்கள் குழுவின் பதவிக்காலம் முடியும் வரை அப்பொறுப்பில் தொடர்வார் என்று வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவையின் சிறப்பு செயற்குழுக் கூட்டம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

அத்துடன் பேரவையின் நிர்வாகிகளாக கீழ்க்கணடவர்களை செயற்குழு தேர்வு செய்கிறது.

1. மாநில செயலாளர் வழக்கறிஞர் கே. சரவணன்,
2. மாநில பொருளாளர் வழக்கறிஞர் டி. தமிழரசன்
3. மாநில அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் கே.ஐ. பழனிச்சாமி
4. மாநில சமூக ஊடகப் பிரிவு செயலாளர் வழக்கறிஞர் கணல் கோ. கதிரவன்
5. சென்னை மண்டல செயலாளர் வழக்கறிஞர் பா. குமார்

6. கிழக்கு மண்டல செயலாளர் வழக்கறிஞர் என்.ஆர். வெங்கடேசன் 7. மேற்கு மண்டல செயலாளர் வழக்கறிஞர் எம். மகாலிங்கம் 8. மத்திய மண்டல செயலாளர் வழக்கறிஞர் ஏ. பாலமூர்த்தி 9. வடக்கு மண்டல செயலாளர் வழக்கறிஞர் கே. சக்கரபாணி 10. தெற்கு மண்டல செயலாளர் வழக்கறிஞர் என். சிவக்குமார்

11. மாநில மகளிரணித் தலைவர் வழக்கறிஞர் நா. நவமணி

பேரவையின் தலைவர் பதவியில் தொடரும் வழக்கறிஞர்கே.பாலுமற்றும்புதியநிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கும் அவர்களின் பணி சிறக்க இக்கூட்டம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

திர்பானம் 2: வழக்கறிரர்கள் சமூகநீதிப் பேவையின் புாவாக டாக்டர் அன்புமணி ராமதாஸ் ஒருமனதாக தேர்வு

வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவையின் செயல்பாடுகள் சிறப்பாக இருக்கும் நிலையில், அது மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்று இந்தச் செயற்குழு கருதுகிறது. அதற்காக வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவைக்கு வழிகாட்டும் வகையில் பேரவையின் புரவலராக செயல்படும்படி டாக்டர் அன்புமணி ராமதாஸை வழக்கறிஞர்கள் சமூகநீதிப் பேரவை கேட்டுக் கொள்கிறது."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கலெக்டர் அலுவலக ஊழியர் தூக்குப்போட்டு தற்கொலை

கன்னியாகுமரி ஜூன் 12

கன்னியாகுமரி மாவட்டம், புதுக்கடை அருகே உள்ள காப்புக்காடு கண்ணன் விளாகம் பகுதியை சேர்ந்தவர் ரசல்ராஜ் (வயது 55). இவர் கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர்அலுவலகத்தில்உதவியாளராக பணியாற்றி வந்தார். ரசல்ராஜ் கடந்த சில நாட்களாக உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வந்ததாகவும், அவருக்கு கடன் தொல்லை இருந்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் மனவேதனை அடைந்த ரசல்ராஜ் ஜூன் 8ம்தேதி வீட்டிற்கு அருகே, தோட்டத்தில் உள்ள மரத்தில் தூக்குப் போட்டு தற்கொலை செய்துகொண்டார். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த போலீசார் விரைந்து சென்று உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தினர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

# தூத்துக்குடியில் கஞ்சா விற்ற 2 வாலிபர்கள் கைது: பைக் பறிமுதல்




தூத்துக்குடி ஜூன் 12

தூத்துக்குடியில் தாளமுத்துநகர்காவல்நிலைய சப்இன்ஸ்பெக்டர் முத்துராஜா மற்றும் போலீசார் நேற்று ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கோவில்பிள்ளை விளை, பால்பண்ணை அருகே நின்று கொண்டிருந்த 2 பேரை சந்தேகத்தின்பேரில்பிடித்துபோலீசார் சோதனை செய்தனர். அவர்கள் பேண்ட் பாக்கெட்டில்விற்பனைக்காக கஞ்சா மறைத்து வைத்திருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து போலீஸ் விசாரணையில் அவர்கள் தூத்துக்குடி வெற்றிவேல்புரம், சிவாஜிபுரத்தைச் சேர்ந்த பார்த்திபன் மகன் மரியபிலிப் மார்க்லின் (வயது 26), கலைஞர்நகர் ஆறுமுகசாமி மகன் வேல்குமார்(25) எனத் தெரியவந்தது. அவர்கள்2பேரையும் போலீசார் கைது செய்து அவர்களிடம் இருந்து 20 கிராம் கஞ்சா மற்றும் ஒரு பைக்கை பறிமுதல் செய்து விசாரணை நடத்தினர்.

# கிணறு தூர்வாரும்போது கிடைத்த ஐம்பொன் கருடாழ்வார் சிலை



திருநெல்வேலி, ஜூன் 12

நெல்லை மாவட்டம், மூலைக்கரைப்பட்டி அருகே அரியகுளம் பஞ்சாயத்து அம்பலம் கிராமத்தில் பிள்ளையார் கோவில் அருகே ஊர் பொதுக்கிணறு உள்ளது. சுமார் 50 அடி ஆழமுள்ள இந்த கிணற்றில் தற்போது குறைந்த அளவே தண்ணீர் உள்ளது. இந்த கிணற்றை யூனியன் பொதுநிதி மூலம் தூர்வாரும் பணி தொடங்கியது. இதற்காக கிணற்றில் உள்ள தண்ணீரை மோட்டார் மூலம் உறிஞ்சி வெளியேற்றினர். தொடர்ந்து கிணற்றின் அடியில் உள்ள சகதியை அப்புறப்படுத்தினர். அப்போது கிணற்றின் அடியில் சுமார் 1½ அடி உயரம் கொண்ட ஐம்பொன்னாலான கருடாழ்வார் சிலை கண்டெடுக்கப்பட்டது. மிகவும் பழமை வாய்ந்த இந்த சிலையின் மதிப்பு பல கோடி ரூபாய் இருக்கும் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து வருவாய்த் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனே மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, நாங்குநேரி தாசில்தார் பாலகிருஷ்ணன், யூனியன் ஆணையாளர் யமுனா மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று ஐம்பொன் சிலையை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். தொடர்ந்துசிலையை தாலுகாஅலுவலகத்துக்கு எடுத்து சென்றனர்.

பழங்கால ஐம்பொன்னாலான கருடாழ்வார் சிலை எப்படி அந்த கிணற்றுக்குள் வந்தது என்பது குறித்து பல்வேறு கோணங்களில் மூலைக்கரைப்பட்டி போலீசார் விசாரித்து வருகின்றனர்.

இதுதொடர்பாக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாருக்கும், தொல்லியல் துறையினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# புதுக்கோட்டை: 108 ஆம்புலன்சில் பிறந்த குழந்தை



புதுக்கோட்டை ஜூன் 12

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த கர்ப்பிணி குரலரசி. நிறைமாத கர்ப்பிணியான இவருக்கு நேற்று இரவு திடீரென பிரசவ வலி ஏற்பட்டது.

இதையடுத்து, 108 ஆம்புலன்சுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. விரைந்து வந்த 108 ஆம்புலன்சில் குரலரசி மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். ஆனால், மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே குரலரசிக்கு பிரசவ வலி அதிகரித்ததையடுத்து ஆம்புலன்சில் இருந்த மருத்துவ உதவியாளர் வித்யா கர்ப்பிணி குரலரசிக்கு பிரசவம் பார்த்தார். ஆம்புலன்சிலேயே பிரசவம் பார்த்ததில் குரலரசிக்கு பெண் குழந்தை பிறந்தது. தாயும், சேயும் நலமுடன் உள்ளனர். பின்னர், இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இக்கட்டான சூழ்நிலையில் குரலரசிக்கு ஆம்புலன்சிலேயே பிரசவம் பார்த்து தாயையும், சேயையும் காப்பாற்றிய மருத்துவஉதவியாளர்வித்யாவுக்கும், 108 ஆம்புலன்ஸ் டிரைவர் சதீஷ் குமாருக்கும் பலரும் நன்றி தெரிவித்தனர்.

# கீழடி அகழ்வாய்வு அறிக்கையை இருட்டடிப்பு செய்ய முயலும் பா.ஜ.க. அரசு வைகோ கண்டனம்

சென்னை ஜூன் 12

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கீழடியில் நடந்த முதல் மற்றும் இரண்டாம் கட்ட அகழாய்வு அறிக்கையை வெளியிடுவதில் ஏன் தாமதம் என்று மக்களவையில் கடந்த 2024 டிசம்பர் மாதம் கேள்வி எழுப்பப்பட்டபோது, அதற்கு பதிலளித்துப் பேசிய மத்திய கலாசாரத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், "2015, 2016ல் நடைபெற்ற கீழடி முதல், 2ஆம் கட்ட அகழாய்வு அறிக்கை கடந்த 2023 ம் ஆண்டே மத்திய அரசிடம் தாக்கல் செய்யப்பட்டது.

அறிக்கையை வெளியிடுவதற்கு முன்நிபுணர்களைக் கொண்டு முழுமையாக ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. முழுமையான ஆய்வுக்குப் பிறகே அரசு விதிகளின்படி அகழாய்வு அறிக்கையை வெளியிட முடியும்" என்று மந்திரி தெரிவித்திருந்தார். கீழடியில் 1, 2, 3ம் கட்ட அகழாய்வு பணிகளை மத்திய அரசின் தொல்லியல்துறை மேற்கொண்டது. 4 முதல் 9 கட்ட அகழாய்வுகளை தமிழ்நாடு அரசின் தொல்லியல்துறை நடத்தியது.

தமிழ்நாடு அரசு நடத்திய அகழாய்வு முடிவுகள் வெளியிடப்பட்டுவிட்ட நிலையில், முதல் மற்றும் 2ம் கட்ட முடிவுகளை மத்திய அரசு வெளியிடவில்லை. முதல் மற்றும் 2ம் கட்ட அகழாய்வு அறிக்கையை வெளியிடக் கோரி ஐகோர்ட்டு மதுரைக்கிளையிலும் வழக்கு தொடரப்பட்டது. ஐகோர்ட்டில் கடந்த 2024 பிப்ரவரியில் விசாரணைக்கு வந்தபோது, 9 மாதத்தில் அறிக்கை வெளியிடப்படும் என மத்திய அரசு கூறியிருந்தது. 14 மாதங்கள் ஆன பிறகும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்நிலையில், கீழடியில் நடந்த தொல்லியல் அகழாய்வு குறித்த அறிக்கையை மறுசீரமைத்து சமர்ப்பிக்குமாறு, அப்பணியில் ஈடுபட்ட தொல்லியல் ஆய்வாளர்அமர்நாத்ராமகிருஷ்ணாவுக்குஇந்தியதொல்லியல் ஆய்வுத் துறை (ASI) உத்தரவிட்டது. இது தொடர்பான திருத்தங்களை மேற்கொண்டு, அறிக்கையை "மேலும் நம்பகத்தன்மை" கொண்டதாக மாற்றும்படி கோரியது. தொல்லியல்ஆய்வாளர்அமர்நாத்ராமகிருஷ்ணா, கீழடியில் பண்டைய நாகரிகத்தின் தடயங்களை வெளிக்கொணர்ந்ததில் முக்கியப் பங்காற்றியவர். அவர் தயாரித்த 982 பக்க அறிக்கை, கீழடி அகழாய்வு தளத்தில் கண்டெடுக்கப்பட்ட கரிமக்கரி (Charcoal) மாதிரிகளின் கார்பன் டேட்டிங் (Carbon dating) மூலம், அந்தப் பகுதி கி.மு.800ம் ஆண்டைச் சேர்ந்த ஒரு குடியிருப்புப் பகுதியாக இருந்திருக்கலாம் என்று உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட பல கலைப்பொருட்கள், தமிழகத்தில் ஒரு நகர்ப்புற நாகரிகத்தின் இருப்பை சுட்டிக்காட்டுகின்றன.

இதுதொடர்பாக இந்திய தொல்லியல் துறை இயக்குநருக்கு தொல்லியல் ஆய்வாளர்அமர்நாத் ராமகிருஷ்ணன் எழுதிய கடிதத்தில், கீழடி ஆய்வறிக்கை சரியாகவே உள்ளது என்றும், தொன்மை அறிவியல் முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு, கி.மு 800 முதல் கி.பி.500 என உறுதி செய்யப்பட்ட பிறகே அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே திருத்தம் தேவையில்லை என்றும் அவரது கடிதத்தில் அமர்நாத் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அடுக்குகள் வாரியாகவும், கால வரிசைப்படியும் அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளன. அகழாய்வு தொடர்பான வரைபடங்கள், தட்டுகள், படங்கள் அனைத்தும் உயர் தெளிவுத்திறனுடன் வழங்கப்பட்டுள்ளன. இறுதி ஆய்வறிக்கையை தாக்கல் செய்து ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகளுக்குப் பின் கேள்வி எழுப்பப்படுகிறது என்றும் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இந்திய தொல்லியல் ஆய்வு துறையின் நடவடிக்கை கீழடி அகழாய்வு முடிவுகளை இருட்டடிப்பு செய்து வேதகால நாகரிகத்தை தூக்கிப் பிடிக்கும் கூட்டத்தின் உள்நோக்கத்தை புலப்படுத்துகிறதோ என்ற ஐயம் எழுகிறது.

சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த மத்திய கலாசாரத்துறை மந்திரி கஜேந்திர சிங் ஷெகாவத், கீழடி அகழ்வாராய்ச்சி ஆய்வு அறிக்கை அறிவியல் பூர்வமான தொழில்நுட்ப ரீதியில் இன்னும் நிரூபிக்கப்படவில்லை. அதற்கு அங்கீகாரம் வழங்க ஏராளமான நடைமுறைகள் உள்ளன. இன்னும் நிறைய சான்றுகள்தேவைப்படுகின்றனஎன்றுகூறியிருக்கிறார்.

கீழடி தமிழ் நாகரீகத்தை

இருட்டடிப்பு செய்ய முயற்சிக்கும் மத்திய அரசு, இல்லாத சமஸ்கிருத நாகரீகத்தைத் தேடிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவில் சமஸ்கிருதம்தான் அனைத்து மொழிகளுக்கும் தாய்; ஆரியர்கள்தான் பூர்வகுடிகள்; வேத இதிகாச புராணங்கள் தான் இந்தியாவின் வரலாறு என நிறுவத் துடிப்பது கடும் கண்டனத்துக்குரியது. மத்திய பா.ஜ.க. அரசு, தமிழ் மக்களின் தாய்மடியான கீழடியை கருவறுக்க அனைத்து வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறது. ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே கலாசாரம் என்று இந்தி ஆதிக்கத்தையும், சமஸ்கிருத பண்பாட்டையும் நிறுவத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ் பா.ஜ.க. கும்பல் இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளுக்கும், பண்பாட்டிற்கும் எதிரானது.

பல்வேறு சதிகளின் மூலமாக தமிழ் மொழியையும், தமிழரின் தொன்மை வரலாற்றையும் இருட்டடிப்பு செய்ய முயலும் பாசிச சக்திகளை முறியடிக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமை ஆகும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# விருதுநகர்: பட்டாசு ஆலையில் வெடி விபத்து 2 பேர் உயிரிழப்பு



விருதுநகர் ஜூன் 12

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி அருகே வடகரையில் ராஜா சந்திர சேகரன் என்பவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், இந்த பட்டாசு ஆலையில் இன்று தொழிலாளர்கள் பேன்சி ரக பட்டாசு தயாரித்துக்கொண்டிருந்தனர். அப்போது, எதிர்பாராத விதமாக பட்டாசு ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டது. இந்த வெடிவிபத்தில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த வெடி விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# டிரைவரை செருப்பால் அடித்த விவகாரம்: போக்குவரத்து உதவி மேலாளர் உள்பட 4 பேர் மீது வழக்குப்பதிவு



மதுரை ஜூன் 12

மதுரை ஆரப்பாளையம் பஸ் நிலையத்தில் கடந்தஞாயிற்றுக்கிழமை பஸ் புறப்படுவது தொடர்பாக திருப்பூர் அரசு பஸ் டிரைவர் கணேசனுக்கும் போக்குவரத்து உதவி மேலாளர் மாரிமுத்துவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதம் முற்றிய நிலையில் பஸ் டிரைவரை உதவி மேலாளர் செருப்பால் அடித்தார். இந்த சம்பவத்தை அங்கு நின்றுகொண்டிருந்த பயணிகள் வீடியோவாக எடுத்தனர். இந்த வீடியோ சமூகவலைதளத்தில் வைரலான நிலையில் போக்குவரத்து உதவி மேலாளர் மாரிமுத்துவை சஸ்பெண்ட் செய்து மதுரை மண்டல போக்குவரத்து நிர்வாக இயக்குநர் நடவடிக்கை எடுத்தார். அதேவேளை, இந்த விவகாரம் தொடர்பாக சஸ்பெண்ட் செய்யப்பட்ட மாரிமுத்து மன்னிப்பு கேட்டு வீடியோ வெளியிட்டார். இந்நிலையில், டிரைவரை செருப்பால் அடித்தவிவகாரம்தொடர்பாக சஸ்பெண்ட் செய்யப்பட்ட போக்குவரத்து உதவிமேலாளர் மாரிமுத்து மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். மாரிமுத்து உள்பட 4 பேர் மீது 5 பிரிவுகளின்கீழ் கரிமேடு போலீசார்வழக்குப்பதிவு செய்துவிசாரணைநடத்தி வருகின்றனர்.

# தூத்துக்குடியில் 15 வழித்தடங்களுக்கு மினி பஸ் இயக்க விண்ணப்பங்கள் வரவேற்பு: கலெக்டர் தகவல்




தூத்துக்குடி ஜூன் 12

தூத்துக்குடி கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு அரசாணை எண்.198 உள்(போக்குவரத்து) நாள் 28.4.2025ன் படி தூத்துக்குடி மாவட்ட அரசிதழ் எண்.20 நாள் 9.6.2025ல் தூத்துக்குடி மாவட்டத்தில் புதிதாக கண்டறியப்பட்ட பின்வரும் 15 வழித்தடங்களுக்கு மினி பஸ் இயக்க அனுமதிச்சீட்டு வேண்டி விண்ணப்பிக்க விரும்புவோர் புதிய மினிப்பேருந்துக்கான SCPA விண்ணப்பப்படிவத்தினை Parivahan மூலமாக விண்ணப்பித்து ஆன்லைனில் கட்டணம் ரூ.1,500+100=1,600 மற்றும் கால நிர்ணய கட்டணம் ரூ.600 என மொத்தம் ரூ.2,200 செலுத்தி விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து விலாசசான்றுக்கான ஆவணத்துடன் உரிய இணைப்புகளுடன் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் இன்று (11.6.2025) நண்பகல் 12 மணிக்குள் நேரில் சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

தூத்துக்குடி வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்கைக்குட்பட்ட வழித்தடங்களான பழைய பேருந்து நிலையம் முதல் மீனாட்சிபுரம், பழைய பேருந்து நிலையம் முதல் சுரேஷ் ஐ.ஏ.எஸ். அகாடமி, டேவிஸ்புரம் முதல் பாலிக்டெனிக், பாலிக்டெனிக் முதல் டேவிஸ்புரம், ஒட்டநத்தம் (சங்கம் பட்டி) முதல் புதியம்புத்தூர் மேலமடம் பேருந்து நிறுத்தம், பசுவந்தனை பேருந்து நிறுத்தம் முதல் எப்போதும் வென்றான் பேருந்து நிறுத்தம், புதுக்கோட்டை முதல் ஹார்பர் வாட்டர் ஆகிய 7 வழித்தடங்களுக்கும், திருச்செந்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்கைக்குட்பட்ட வழித்தடங்களான ஏரல் முதல் முடிவைத்தானேந்தல் (வழி) வாகைக்குளம், முருகேசபுரம் முதல் செட்டியாபத்து, கற்குவேல் அய்யனார் கோவில் திருச்செந்தூர் எம்.எல்.ஏ. ஆபிஸ், சங்கரநயினார்புரம் சிவன் கோவில் சாத்தான்குளம், குலசை கடற்கரை ரோடு திருச்செந்தூர் பஸ் ஸ்டாண்ட், ரெயில்வே கேட் ரோடு நாசரேத் சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்டு, செட்டியாபத்து திருச்செந்தூர் பஸ் ஸ்டாண்ட், முஸ்லீம் தெரு, குலசை திருச்செந்தூர் பஸ் ஸ்டாண்டு ஆகிய 8 வழித்தடங்களுக்கும் என மொத்தம் 15 வழித்தடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இணைக்கவேண்டிய படிவம் மற்றும் ஆவணங்கள்:

1. SCPA Form with fees of Rs.1,500+100+600/
2. Address evidence
3. Road worthy certificate from A.E/D.E. Highways
4. Tentative timings
5. Route –Map/Sketch
6. Solvency Certificate உள்ளிட்ட ஆவணங்களுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மோசமான வானிலை: பெங்களூரு விமானங்கள் சென்னையில் தரையிறக்கம்



சென்னை ஜூன் 12

கர்நாடகமாநிலம்பெங்களூருவில் இன்று அதிகாலை முதல் கனமழை பெய்து வருகிறது. இடி, மின்னல், பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. மேலும், மோசமான வானிலை நிலவுவதால் பெங்களூருவில் தரையிறங்கவேண்டிய 6 விமானங்கள் சென்னையில் தரையிறங்கின.

அதன்படி, மலேசியா, தாய்லாந்து, டெல்லி, உத்தரபிரதேசம் ஜார்க்கண்ட், குஜராத் ஆகிய இடங்களில் இருந்து வந்த விமானங்கள் மோசமான வானிலையால் பாதுகாப்பு காரணங்களுக்காக பெங்களூருவில் தரையிறங்காமல் சென்னைக்குதிருப்பி விடப்பட்டன. சென்னை விமான நிலையத்தில் தரையிறங்கிய விமானங்கள் மீண்டும் வானிலை சீரானதும் பெங்களூரு புறப்படும் என்று விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# செல்போன் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது மத்திய மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் பாராட்டு



சென்னை ஜூன் 12

தமிழ் மொழிக்காக செயற்கை நுண்ணறிவு தளத்தை உருவாக்கும் நோக்கில் தனியார் நிறுவனம் சார்பில் தமிழ் 'ஏ.ஐ.' திட்டம்தொடங்கப்பட்டு இருக்கிறது. இதன் தொடக்க நிகழ்ச்சி சென்னை தரமணி ஐ.ஐ.டி. ஆராய்ச்சி பூங்கா வளாகத்தில் நேற்று நடந்தது. இந்த நிகழ்ச்சியில் தமிழ் 'ஏ.ஐ.' திட்ட நிறுவனர் அஷ்வத்தாமன் வரவேற்புரை ஆற்றினார். இதில் மத்திய ரெயில்வே துறை மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் காணொலி காட்சி வாயிலாக பங்கேற்று பேசினார். அப்போதுஅவர்கூறியதாவது:

உலகின் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழ் ஏ.ஐ.யுடன் இணைவதில் இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முன்னேற்றமாக இருக்கும். தமிழ்மொழி மற்றும் இந்திய மொழிகள் ஏ.ஐ.யுடன் இணைவதில் இது ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கும். இந்த திட்டம் தமிழுக்கு மட்டுமல்ல, இந்திய மொழிகள் அனைத்திற்கும் ஏ.ஐ. துறையில் புதிய வாயிலாக அமையும்.

தமிழ்நாடு மின்னணு உற்பத்தியின் மையமாக செயல்படுகிறது. தற்போது செல்போன், லேப்டாப், சர்வர் போன்ற மின்னணு சாதனங்கள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கிறது. தமிழ்நாட்டில் புதிய மின்னணு உற்பத்தி கிளஸ்டருக்கு சமீபத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் அதன் கட்டுமானம் தொடங்கும். இந்த முயற்சிகள் அனைத்தும் தமிழ்நாட்டை தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னணிக்கு கொண்டுசெல்லும்.

எலக்ட்ரானிக்ஸ் துறையின் தலைமையாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்று பிரதமர் பலமுறை கூறியுள்ளார், அது தற்போது நிறைவேறுகிறது. ஏற்கனவே வந்தே பாரத் ரெயில் உற்பத்தி மையமாக தமிழ்நாடு திகழ்கிறது. அதிநவீன ரெயில் சக்கர உற்பத்தி தொழிற்சாலை சென்னை அருகே விரைவில் வரவிருக்கிறது. இந்தியாவின் எதிர்கால ரெயில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் மலேசியா நாட்டின் தேசிய ஒற்றுமைக்கான துணை மந்திரி சரஸ்வதி கந்தசாமி, லண்டன் செல்ஸ்போர்ட் அரசு கவுன்சிலர் பாப்பா வெற்றி ஆகியோரும் கலந்து கொண்டு பேசினார்கள். இது தவிர பா.ஜ.க. நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.

# கடலூரில் பாதயாத்திரை சென்றவர்கள் மீது கார் மோதி விபத்து 3 பேர் பலி



கடலூர் ஜூன் 12
கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் இருந்து கள்ளக்குறிச்சி மாவட்டம் மேல்நாரியப்பனூரில் உள்ள புனித அந்தோணியார் ஆலயத்திற்கு இன்று 10க்கும் மேற்பட்டோர் பாதயாத்திரையாக சென்றனர்.

இந்நிலையில், கடலூரின் மணலூர் பகுதியில் இன்று அதிகாலை பாதயாத்திரையாக சென்று கொண்டிருந்தவர்கள் மீது சாலையில் வேகமாக வந்த கார் மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் பாதயாத்திரை சென்ற 3 பேர் சம்பவம் இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 4 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், படுகாயமடைந்தவர்களை மீட்டு விருத்தாச்சலம் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தூத்துக்குடி: போக்சோ வழக்கில் வாலிபருக்கு வாழ்நாள் சிறை



தூத்துக்குடி, ஜூன் 12
தூத்துக்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2019ம் ஆண்டு 16 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் தூத்துக்குடி சோட்டையன் தோப்பு பகுதியைச் சேர்ந்த தங்கபாண்டி மகன் ராஜ்குமார் (வயது 35) என்பவரை தூத்துக்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

இவ்வழக்கின் விசாரணை தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி பிரீத்தா நேற்று (10.6.2025) குற்றவாளியான ராஜ்குமாருக்கு எஞ்சிய வாழ்நாள் முழுவதும் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு நிவாரண நிதியிலிருந்து ரூ.5 லட்சம் வழங்கவும் உத்தரவிட்டார்.

இவ்வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய தூத்துக்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர்கள் பிரேமா மற்றும் வனிதா, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் முத்துலட்சுமி, விசாரணைக்கு உதவியாக இருந்த ஏட்டு ரபிலாகுமாரி ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் பாராட்டினார்.

# திருநெல்வேலி: மின்வாரிய ஊழியர்கள் மின் பாதுகாப்பு உறுதிமொழி



திருநெல்வேலி ஜூன் 12
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம், கல்லிடைக்குறிச்சி கோட்டம், சேரன்மகாதேவி உப கோட்டத்தில் உள்ள பிரிவு அலுவலகங்களில் உள்ள அனைத்து களப்பணியாளர்களுக்கும் திருநெல்வேலி மேற்பார்வை பொறியாளர் அகிலாண்டேஸ்வரி உத்தரவுப்படி, கல்லிடைக்குறிச்சி செயற்பொறியாளர் சுடலையாடும் பெருமாள் வழிகாட்டுதலின்படி நேற்று சேரன்மகாதேவி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் வைத்து உதவி செயற்பொறியாளர் சந்திரன் தலைமையில் மின் பாதுகாப்பு வகுப்பு நடைபெற்றது.

மின் பாதுகாப்பு வகுப்பில் மற்ற இடங்களில் நடைபெற்ற விபத்துக்கள் குறித்தும் பணியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்தும், மின்வாரிய இணையதளத்தில் பாதுகாப்பு புகைப்படங்களை பதிவேற்றம் செய்வது குறித்தும் சேரன்மகாதேவி உதவி செயற்பொறியாளர் விரிவாக எடுத்து கூறினார். பின்னர் அவர் முன்னிலையில் அனைத்து பணியாளர்களும் மின் பாதுகாப்பு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் சேரன்மகாதேவி உதவி மின் பொறியாளர் கைலாசமூர்த்தி, முக்கூடல் உதவி மின் பொறியாளர் பிரம்மநாயகம், கோபாலசமுத்திரம் உதவி மின் பொறியாளர் ரவிச்சந்திரன்(எ) மாடசாமி மற்றும் உப கோட்டத்தில் உள்ள அனைத்து பிரிவு அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரையில் இருந்து சென்னை வந்தபோது சாப்பிட்டு கொண்டே ஆம்னி பஸ்சை ஓட்டிய டிரைவர்



மதுரை, ஜூன் 12
மதுரை மாட்டுத்தாவணியில் இருந்து 40 பயணிகளுடன் ஆம்னி பஸ் ஒன்று சென்னைக்கு புறப்பட்டது. சிறிது தூரம் வந்த நிலையில் ஆம்னி பஸ்சை ஓட்டிச்சென்ற டிரைவர், பஸ்சை ஓட்டிக் கொண்டே, ஸ்டியரிங் நடுவில் உணவு பார்சலை வைத்து சாப்பிட தொடங்கினார். ஆபத்தான முறையில் பஸ்சை இயக்கிய டிரைவரை பார்த்த பயணிகள் அதிர்ச்சி அடைந்தனர். அப்போது பயணி ஒருவர், சாப்பிட்டுவிட்டு அதன் பின்பு பஸ்சை ஓட்டலாமே? என டிரைவரிடம் கேட்டார். அதற்கு அவர், நேரமில்லாததால் பஸ்சை ஓட்டிக்கொண்டே சாப்பிடுவதாகவும், இது பழக்கப்பட்ட ஒன்றுதான் என்றும் கூறுகிறார். இந்த காட்சிகளை பஸ்சில் இருந்த பயணி ஒருவர் வீடியோ எடுத்து, சமூக வலைத்தளங்களில் வெளியிட்டார். தற்போது இந்த வீடியோ வைரலாக பரவி வருகிறது. சாப்பிட்டுக் கொண்டே ஆம்னி பஸ்சை டிரைவர் ஓட்டிச் சென்றதற்கு பலரும் கண்டனம் தெரிவித்து உள்ளனர்.

# தஞ்சை பெரிய கோவிலில் உண்டியல் காணிக்கை எண்ணும்போது ரூ.25 ஆயிரம் திருடிய பெண் கைது



தஞ்சாவூர் ஜூன் 12
தஞ்சை பெரிய கோவிலில் பெருவுடையார், பெரியநாயகி அம்மன், வராகி அம்மன், விநாயகர், தட்சிணாமூர்த்தி, முருகன், நடராஜர் மற்றும் சண்டிகேஸ்வரர் உள்ளிட்ட சன்னதிகள் உள்ளன. இந்த சன்னதிகளில் உள்ள 11 உண்டியல் காணிக்கைகளை ஒவ்வொரு மாதமும் திறந்து எண்ணுவது வழக்கம்.

அதன்படி இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் முன்னிலையில் பெரியநாயகி அம்மன் சன்னதியில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் வங்கி ஊழியர்கள், தன்னார்வலர்கள், கோவில் ஊழியர்கள் உள்ளிட்டோர் ஈடுபட்டு இருந்தனர். கண்காணிப்பு கேமரா மூலம் உண்டியல் பணம் எண்ணும் பணி கண்காணிக்கப்பட்டது.


பணம் எண்ணும் பணி மும்முரமாக நடந்து கொண்டு இருந்த நிலையில் அந்த பணியில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர், யாரும் பார்க்காத வகையில் ரூ.500, ரூ.200, ரூ.100 என ஒவ்வொன்றாக பணத்தை லாவகமான முறையில் எடுத்து தனது மடியில் ஒளித்து வைத்து கொண்டிருந்தார்.

பின்னர் தான் எவ்வளவு பணம் திருடியுள்ளோம் என்று பார்க்க ஆசைப்பட்ட அந்த பெண், பணத்தை எண்ணுவதற்காக மறைவான இடத்தை நோக்கி சிறிது தூரம் நடந்து சென்றார். அப்போது சில ரூபாய் நோட்டுகள் கீழே சிதறி விழுந்துள்ளது. அதைப்பார்த்த கோவில் ஊழியர் வீரமணி, அந்த பெண்ணையும், களவுமாக பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தார்.

போலீசார் நடத்திய விசாரணையில் பணத்தை திருடிய பெண் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியைச் சேர்ந்த போஸ் என்பவரின் மனைவி இந்திரா(60 வயது) என்பதும், உண்டியல் காணிக்கை ரூ.25 ஆயிரத்து 780ஐ அவர் திருடியதும் தெரிய வந்தது.

மேலும் அவர் பணம் எண்ணும் பணியில் தன்னார்வலராக சேர்ந்து முதல் முறையாக பெரிய கோவிலில் பணம் எண்ணும் பணியில் ஈடுபட்டதும் தெரியவந்தது. இது குறித்து தஞ்சை அரண்மனை தேவஸ்தான செயல் அலுவலர் சத்யராஜ் அளித்த புகாரின் பேரில் தஞ்சை மேற்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து இந்திராவை கைது செய்தனர்.

# மண்டபம் கடற்கரையில் கரை ஒதுங்கிய ரசாயன பொருள் அகற்றும் பணி மும்முரம்



ராமேசுவரம், ஜூன் 12
கேரள மாநிலம் விழிஞ்ஞம் துறைமுகத்தில் இருந்து, கடந்த மாதம் 24ந் தேதி நைஜீரியா நாட்டு சரக்கு கப்பல் ஒன்று கொச்சி துறைமுகத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென அந்த கப்பல் கடலில் மூழ்கியது. அதில் இருந்த சில கன்டெய்னர்கள் கன்னியாகுமரி, கூடங்குளம் உள்ளிட்ட கடற்கரை பகுதிகளில் ஒதுங்கின. சில கன்டெய்னர்கள் நடுக்கடலிலேயே உடைந்து அதில் இருந்த பல்வேறு பொருட்கள் கடலில் மூழ்கியும், அலையின் வேகத்தால் ஆங்காங்கே கரை ஒதுங்கியும் வருகின்றன.

இந்நிலையில் ராமேசுவரம் அருகே தனுஷ்கோடி கடற்கரையில் நேற்று முன்தினம் சுமார் 10 கிலோமீட்டர் தூரத்திற்கு பிளாஸ்டிக் உபகரணங்கள் தயாரிக்க பயன்படுத்தும் சிறிய பாசி போன்ற வெண்ணிற ரசாயன பொருள் குவியல், குவியலாக கரை ஒதுங்கி கிடந்தது. இந்த ரசாயன பொருளுடன் கூடிய 40க்கும் மேற்பட்ட மூடைகளும் கரை ஒதுங்கி கிடந்தன.

கடற்கரையிலும், கடலிலும் பரவி வந்த இந்த ரசாயன பொருளால், கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்படும் என நிபுணர்கள் அச்சம் தெரிவித்தனர். எனவே உடனே அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கையும் வலுத்தது.

இந்நிலையில் ராமநாதபுரம் கலெக்டர் உத்தரவின்பேரில் ரசாயன பொருளை அகற்றும் பணி நேற்று தொடங்கியது. இந்த பணியில் 100க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள், தன்னார்வலர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

# திருநெல்வேலி: நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவான வாலிபர் கைது




திருநெல்வேலி ஜூன் 12
திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி பகுதியில் கடந்த 2021ம் ஆண்டு கொலை முயற்சி மற்றும் அடிதடி வழக்கில் ஈடுபட்ட பட்டர்புரத்தை சேர்ந்த சுரேஷ் (வயது 24) கைது செய்யப்பட்டு ஜாமினில் வெளிவந்தார். அவர் நீதிமன்ற விசாரணைக்கு கடந்த 10½ மாதங்களாக ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்ததால், அவருக்கு திருநெல்வேலி நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சுரேஷை நாங்குநேரி காவல் நிலைய போலீசார் தேடிவந்த நிலையில் நேற்று (10.6.2025) கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

# பிரபாகரனுக்கு நிகரான வீரத்தைக் கொண்டவர் எடப்பாடி பழனிச்சாமி ராஜேந்திர பாலாஜி



விருதுநகர், ஜூன்12
விருதுநகர் மேற்கு மாவட்ட அதிமுக சார்பாக சிவகாசியில் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அதில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திரபாலாஜி கலந்து கொண்டார்.

அந்த கூட்டத்தில் பேசிய அவர், "அதிமுகவை எதிர்க்க திமுகவிற்கு தைரியமும் துணிச்சலும் கிடையாது. அதிமுகவிற்கு கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகளே கிடையாது. எடப்பாடி பழனிசாமி இருக்கும் இடத்தில் மதவாதம் இருக்காது. மதவாதம் துளிர்விட்டால் அங்கு எடப்பாடி பழனிசாமி இருக்க மாட்டார்.


ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி என் மீது அவதூறு வழக்குகள் போடப்பட்டது. என்னை சிறையில் அடைக்க முயற்சி செய்கிறார்கள். இதற்கெல்லாம் நான் பயந்து விட்டேனா? அல்லது ஓடி ஒடுங்கி விட்டேனா? அல்லது கட்சியில் இருந்து ஓரம் போய்விட்டேனா?. திமுக சதி திட்டம் ஒருப்போதும் நடக்கவே நடக்காது.

இதுவரை நான் யாரையும் ஏமாற்றியதும் இல்லை. எந்த ஒரு மோசடி செய்யவில்லை. திமுகவை நாட்டை விட்டு விரட்டும் வரை நான் ஓயமாட்டேன். தமிழகத்தில் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் தான் ஆட்சி நடக்கும். பெருவாரியான சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அதிமுக தலைமையில் ஆட்சி அமையும்.

வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக அரசு 200 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று முதல் அமைச்சர் ஸ்டாலின் மற்றும் அவரது கூட்டணி கட்சிகள் கூறி வருகிறது. ஆனால் வரும் 2026 ஆண்டுக்கான சட்டமன்ற தேர்தலில் 20 தொகுதிக்கு மேல் திமுக வெற்றி பெறாது.

பிரபாகரனுக்கு நிகரான வீரத்தைக் கொண்டவர் எடப்பாடி பழனிச்சாமி. மக்கள் அதிமுகவிற்கு வாக்களிக்க தயாராகி விட்டார்கள், அதற்காக தொண்டர்கள் அனைவரும் பாடுபட வேண்டும்" என்று ராஜேந்திரபாலாஜி கூறினார்.

# முதியவர்களை குறிவைத்து நடக்கும் கொலை, கொள்ளைகள் அதிகரிப்பு மதுரை ஐகோர்ட்டு நீதிபதிகள் கவலை



மதுரை ஜூன் 12
மதுரையைச் சேர்ந்த் ரமேஷ் என்பவர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

தமிழகத்தில் வயதானவர்களை பஸ் நிலையங்கள், சாலை ஓரங்கள் போன்ற இடங்களில் அவர்களது பிள்ளைகளும், உறவினர்களும் தனியே விட்டுச்செல்லும் நிலை அதிகரித்து வருகிறது. இதனால் சுகாதார குறைபாடுகளால் உடல் நலக்குறைவு ஏற்பட்டு முதியோர் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். இவர்களை போன்றவர்களை பாதுகாப்பதற்காக தேசிய முதியோர் மையங்களை அமைப்பது தொடர்பாக ஏற்கனவே வழிகாட்டுதல்கள் உள்ளன.

ஆனால் இந்த மையங்கள் அனைத்து மாவட்டங்களிலும் முறையாக அமைக்கப்படவில்லை. இதன் காரணமாகவே ஏராளமான முதியவர்கள் ஆதரவற்று, பாதுகாப்பற்ற நிலையில் சாலையோரங்களில் இருக்கும் அவலம் ஏற்படுகிறது. இந்த நிலையை தவிர்க்க தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தேசிய முதியோர் மையங்களை அமைக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், மரியகிளாட் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், "வயதானவர்களை குறிவைத்து கொள்ளை, கொலை போன்ற சம்பவங்கள் நடப்பது அதிகரித்து வருகிறது. முதியோருக்காக அமைக்கப்பட்டுள்ள மையங்களிலும், அடிப்படை வசதிகள் முறையாக செய்யப்படுவதில்லை. முதியவர்களை பாதுகாப்பது அரசின் கடமை" என கருத்து தெரிவித்தனர்.

பின்னர் மத்திய அரசு வக்கீல் ஆஜராகி, "முதியோர் மையங்களை அமைப்பதற்கான நிதி மட்டும்தான் மத்திய அரசு வழங்க முடியும். முதியோர் இல்லம் அமைப்பது மாநில அரசின் பணியாகும்" என்றார். அதற்கு நீதிபதிகள், "இந்த நிதி சரியாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டியது மத்திய அரசின் வேலை தானே?" என கேள்வி எழுப்பினர்.

மேலும் நீதிபதிகள் கூறுகையில், "மூத்த குடிமக்களை பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கான அடிப்படை தேவைகளை நிறைவேற்றி அவர்களை பாதுகாப்பது அரசின் கடமை. எனவே இந்த வழக்கில் மத்திய சமூக நலத்துறையின் முதன்மை செயலாளர், தமிழக அரசின் சமூக நலத்துறையின் முதன்மை செயலாளர் ஆகியோரை எதிர்மனுதாரராக சேர்க்கிறோம். தேசிய முதியோர் மையங்கள் அமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மத்திய, மாநில அரசுகள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும்" என உத்தரவிட்டு, வழக்கை 2 வாரத்துக்கு ஒத்தி வைத்தனர்.

# காதலியின் வீடு தேடி வந்த இளைஞருக்கு அடி, உதை பரபரப்பு சம்பவம்



கன்னியாகுமரி ,ஜூன் 12
கன்னியாகுமரி மாவட்டம் அருமனை அருகே உள்ள பள்ளிக்கோணம் பகுதியை சேர்ந்தவர் சிஜூ (வயது20). இவர் நாகர்கோவிலில் ஒரு தனியார் நிறுவனத்தில் ஊழியராக வேலை பார்த்து வருகிறார். இவரும் மாத்தூர்கோணம் பகுதியை சேர்ந்த ஒரு இளம் பெண்ணும் கடந்த 5 ஆண்டுகளாக காதலித்து வருகின்றனர். இவர்களின் காதல் இரு வீட்டாருக்கும் தெரிய வருவே ஆரம்பத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. பின்னர் சுமூகமாக பேசி இளம்பெண்ணின் கல்லூரி படிப்பு முடிந்த பின்பு திருமணம் செய்து கொடுப்பதாக முடிவெடுத்தனர். இந்தநிலையில் இருவரும் வெவ்வேறு மதங்களை சேர்ந்தவர்கள் என்பதால் மீண்டும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு வந்தது.

அதேபோல் இளம்பெண் காதல் திருமணம் செய்வது அவரது அண்ணனுக்கு பிடிக்கவில்லை. இதனால் அவர் ஆரம்பத்தில் இருந்தே எதிர்ப்பு தெரிவித்து வந்தார்.

இந்நிலையில், சம்பவத்தன்று இளம்பெண்ணின் அண்ணன், சிஜூவை செல்போனில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதம் முற்றிய நிலையில் இளம்பெண்ணின் அண்ணன், தனது தங்கையிடம் பேசக்கூடாது என்றும், எங்கள் ஊருக்குள் வரக்கூடாது என்றும் எச்சரித்தார். அத்துடன் எங்கள் வீட்டின் அருகே வந்து பார் என சவால் விடுத்தார். அப்போது சிஜூ, வருவேன் என சவாலை ஏற்றுக் கொண்டார்.

அத்துடன் சிஜூ இளம் பெண்ணின் வீட்டின் அருகே வந்துள்ளார்.

இதைபார்த்து ஆத்திரமடைந்த இளம்பெண்ணின் அண்ணன், சிஜூவிடம் நேருக்கு நேர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். ஒரு கட்டத்தில் வாக்குவாதம் முற்றிய நிலையில் இளம்பெண்ணின் அண்ணன் சிஜூவை சரமாரியாக தாக்கினார். இதில் காயமடைந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து சிஜூ அருமனை போலீசில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து இளம்பெண்ணின் அண்ணனை தேடி வருகின்றனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

12.6.2025

# வனவிலங்குகளை வேட்டையாடிய அண்ணன், தம்பி உள்பட 4 பேர் கைது: நாட்டு துப்பாக்கி பறிமுதல்




தென்காசி ஜூன் 12

தென்காசி மாவட்டம், கடையநல்லூரை அடுத்த மேலக்கடையநல்லூரைச் சேர்ந்த முருகன் என்பவருக்கு சொந்தமான பசு மாடு கடந்த சில நாட்களுக்கு முன்பு அங்குள்ள மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் உள்ள தென்னந்தோப்பில் மேய்ச்சலுக்கு சென்றது. அப்போது அங்கு கொய்யாப்பழத்தில் மறைத்து வைத்திருந்த நாட்டு வெடிகுண்டை மாடு கடித்ததில் முகம் சிதைந்து பலியானது.

இதுகுறித்த புகாரின்பேரில் கடையநல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் காட்டுப்பன்றிகளை வேட்டையாடுவதற்காக கொய்யாப்பழத்தில் மறைத்து வைத்திருந்த நாட்டு வெடிகுண்டை மாடு கடித்ததில் இறந்தது தெரியவந்தது. இதுதொடர்பாக மேலக்கடையநல்லூர் மலம்பாட்டை தெருவைச் சேர்ந்த பால்பாண்டி (வயது 46) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

பால்பாண்டியிடம் போலீசார்விசாரித்தபோது, அவர் தனது தம்பி மற்றும் கூட்டாளிகளுடன் சேர்ந்து மேற்கு தொடர்ச்சி மலையடிவார பகுதிகளில் பழங்களில் நாட்டு வெடிகுண்டுகளை மறைத்து வைத்தும், நாட்டு துப்பாக்கி மூலமும் வனவிலங்குகளை வேட்டையாடியது தெரியவந்தது.

இதுதொடர்பாக பால்பாண்டியின் தம்பி சந்தனபாண்டி(40), நண்பர்களான பண்பொழி கரிசல்குடியிருப்பு மேல பிள்ளையார்கோவில் தெருவைச் சேர்ந்த கண்ணன் மகன் சுபாஷ்(20), செங்கோட்டை மேலூர் கே.சி.ரோடு பகுதியைச் சேர்ந்த பரமசிவன் மகன் ராமசுப்பிரமணியன்(எ) ராம்ஜி(35) ஆகிய 3 பேரையும் போலீசார் கைது செய்தனர். மேலும் சந்தனபாண்டியிடம் இருந்த நாட்டு துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டது. கைதான 4 பேரையும் போலீசார் தென்காசி கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# தூத்துக்குடி அருகே பாம்பு கடித்து விவசாயி சாவு



தூத்துக்குடி, ஜூன் 12

தூத்துக்குடி மாவட்டம், எப்போதும் வென்றான் அருகில் உள்ள தெற்கு கோடாங்கிபட்டி கிராமம், தெற்கு தெருவைச் சேர்ந்த பரமசிவம் மகன் சந்திரவேல் (வயது 60), விவசாயி ஆவார். இவர் நேற்று முன்தினம் இரவு தனது வீட்டு வாசலில் பாய் விரித்து படுத்து தூங்கியுள்ளார். அப்போது அங்கு வந்த ஒரு பாம்பு அவரை கடித்துள்ளது.

இதனையடுத்து அரது மகன் ஜெயக்குமார் கார் மூலம் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார். அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர், அவர் ஏற்கெனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளார். இதுகுறித்து எப்போதும் வென்றான் காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர் மேகலா வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்.

# இன்றைய ராசி பலன்கள் (12.6.2025)

**மேஷம்:** பலம் அதிகரிக்கும் நாள். பணியில் முன்னேற்றம் காணப்படும். உதவிகள் தேடி வரும். பரிகாரம்: சுந்தரருக்கு அர்ச்சனை செய்யவும்.

**ரிஷபம்:** உழைப்பிற்கு பலன் கிட்டும் நாள். தொழில் வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள். பரிகாரம்: விநாயகர் பூஜை செய்யவும்.

**மிதுனம்:** அதிக செயல்திறன். முக்கிய முயற்சிகள் வெற்றி பெறும். பரிகாரம்: விஷ்ணு ஸ்தோத்திரம் பாராயணம்.

**கடகம்:** மன நிம்மதி பெறும் நாள். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். பரிகாரம்: தேவி பூஜை செய்வது நல்லது.

**சிம்மம்:** நல்ல சந்தர்ப்பங்கள் ஏற்படும். பணவரவுதிருப்திகரமாகஇருக்கும். பரிகாரம்: சூரிய நமஸ்காரம்.

**கன்னி:** புதிதாக திட்டமிடும் நாள். பயணங்களால் லாபம். பரிகாரம்: வியாழனுக்கு பால் அபிஷேகம் செய்யவும்.

**துலாம்:** உறவுகளில் நம்பிக்கை உருவாகும். வழக்குகள் சாதகமாக முடியும். பரிகாரம்:துர்க்கையைவணங்கவும்.

**விருச்சிகம்:** ஆதாயம் பெருகும் நாள். புதிய முயற்சி வெற்றி தரும். பரிகாரம்: சனீஸ்வரரை வழிபடவும்.

**தனுசு:** புதிய ஒப்பந்தங்கள் சாதகமாகும். வெளிநாட்டுவாய்ப்புகள். பரிகாரம்: குருபகவானுக்கு வணக்கம் செலுத்தவும்.

**மகரம்:** அறிவில் நம்பிக்கை. குடும்ப நிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள். பரிகாரம்: அனுமன் சாஸ்திரம் பாராயணம்.

**கும்பம்:** இணைவைப் பெறும் நாள். தொழிலில் கூடுதல் ஆதாயம். பரிகாரம்: களபை வழிபடவும்.

**மீனம்:** அறிவில் நம்பிக்கை. குடும்ப நிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள். பரிகாரம்: அனுமன் சாஸ்திரம் பாராயணம்.

# அரசு மருத்துவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் அண்ணாமலை பேச்சு

சென்னை, ஜூன் 12

தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கொரோனா பேரிடர் காலத்தில் பணியாற்றி உயிரிழந்த மருத்துவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், உயிரிழந்த மருத்துவர் விவேகானந்தன் மனைவிக்கு அரசு வேலை வழங்க வேண்டும், அரசாணை எண் 354 நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், மருத்துவ உட்கட்டமைப்புகள், போதிய பணி நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள், தமிழக அரசு மருத்துவர்களின்நீண்ட நாள் கோரிக்கைகளாக இருந்து வருகின்றன. இவற்றை வலியுறுத்தி, பல்வேறு அறப்போராட்டங்களில் அரசு மருத்துவர்கள் ஈடுபட்ட பிறகும், அவர்கள் குரலுக்குதி.மு.க.அரசுசெவிசாய்க்கவில்லை.

தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தபோது, அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவர்களைசந்தித்த மு.க. ஸ்டாலின், தி.மு.க. ஆட்சிக்கு வந்த உடன், மருத்துவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளித்தார். ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளாக, அந்த வாக்குறுதியை நிறைவேற்ற, அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தி.மு.க. அரசின் தொடர் புறக்கணிப்பால் விரக்தி அடைந்துள்ள மருத்துவர்கள், முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினின் கவனத்தை ஈர்க்க, இன்று, மேட்டூரிலிருந்து சென்னை வரை, பாதயாத்திரை போராட்டம் தொடங்கியுள்ளனர். கொரோனா போன்ற பெருந்தொற்று காலத்திலும், தன்னலமின்றி பணியாற்றிய அரசு மருத்துவர்களை, பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து ஏமாற்றிய முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின், நான்கு ஆண்டுகள் கடந்தும், இன்னும் அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்காமல், போராடும் நிலைக்குத் தள்ளியிருப்பது, துரதிருஷ்டவசமானது. வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. உடனடியாக, அரசு மருத்துவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசு முன்வரவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க.விற்காக பிரசாரம் செய்வேன் டி.டி.வி. தினகரன்

புதுக்கோட்டை ஜூன் 12

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ள நிலையில் தமிழக அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது.

கூட்டணி, தொகுதி பங்கீடு உள்பட பல்வேறு தேர்தல் வியூகங்களை அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்திவருகின்றன. அந்தவகையில்பா.ஜ.க. கூட்டணியில் உள்ள அ.ம.மு.க. கட்சியின் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் புதுக்கோட்டையில் இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது,

தமிழகத்தில் கண்டிப்பாக கூட்டணி ஆட்சிதான் அமையும். அதைஅமித்ஷாஏற்கனவேகூறிவிட்டார். மத்தியில் தனிப்பெரும்பான்மையுடன் இருந்தபோதும் கூட்டணி கட்சிகளுக்கு அமைச்சரவையில் பா.ஜ.க. இடம் அளித்தது. அ.தி.மு.க. அழைத்தால் வரும் சட்டசபை தேர்தலில் தேசிய ஜனநயாக கூட்டணியில் அ.தி.மு.க.விற்காக பிரசாரம் செய்வேன். 234 தொகுதிகளிலும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு பிரசாரம் செய்வேன்' என்றார்.

# தேர்தலில் தனித்துப்போட்டியிட தே.மு.தி.க. தயங்காது பிரேமலதா விஜயகாந்த்



சென்னை ஜூன் 12

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ள நிலையில் அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது.

கூட்டணி, தொகுதி பங்கீடு உள்பட பல்வேறு தேர்தல் வியூகங்களை அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தி வருகின்றன. அந்த வகையில், தே.மு.தி.க. நிர்வாகிகளுடன் அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இன்று ஆலோசனை நடத்தி வருகிறார்.

தே.மு.தி.க. அலுவலகத்தில் நடைபெற்று வரும் இந்த ஆலோசனைக்கூட்டத்தில் மாவட்ட, செயலாளர்கள், தேர்தல் பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில், இந்த ஆலோசனைக் கூட்டத்தின்போது தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் பேசியதாவது,

சட்டமன்ற தேர்தலில் தே.மு.தி.க. தனித்துப்போட்டியா? என்பது பற்றி இப்போது பதில் கூற முடியாது. அந்த கேள்விக்கு காலம்தான் பதில் சொல்லும். ஆனால், தேர்தலில் தனித்துப்போட்டியிட தே.மு.தி.க. தயங்காது. கடலூரில் அடுத்த ஆண்டு ஜனவரி 9ம் தேதி தே.மு.தி.க. மாநாடு நடைபெறும்.

தே.மு.தி.க.வுக்கு ராஜ்யசபா சீட் தொடர்பாக அ.தி.மு.க. ஏற்கனவே அறிவித்ததில் ஆண்டு குறிப்பிடப்படவில்லை. இதுகுறித்து எடப்பாடி பழனிசாமியிடம் கேட்டபோது ஆண்டு குறிப்பிடுவது வழக்கத்தில் இல்லை என்று கூறினார். எழுத்துப்பூர்வமாக தருவதைவிட எனது வார்த்தைகள்தான் முக்கியம் என்று அவர் உறுதியும் கொடுத்தார். தற்போது தே.மு.தி.க.வுக்கு 2026ம் ஆண்டு ராஜ்யசபா சீட் கொடுக்கப்படும் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார். பொறுத்தார் பூமி ஆள்வார். நிச்சயமாக அதற்கான காலம் வரும்' என்றார்.

# "என் வாழ்க்கை கதையை படமாக்கினால், இந்த பெயர்தான் வைப்பேன்" சாய் பல்லவி



நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய சாய் பல்லவி, தன் வாழ்க்கை கதையை யாராவது படமாக்கினால் அதற்கு 'பிப்டி ஷேட்ஸ் ஆப் பல்லவி' என்று பெயர் வைக்க விரும்புவதாக கூறினார்.

தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வரும் சாய் பல்லவி, தற்போது பாலிவுட்டில் உருவாகி வரும் "ராமாயணம்" படத்தில் சீதையாக நடித்து வருகிறார். இந்நிலையில், சாய் பல்லவி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டபோது அவரிடம் , 'உங்கள் வாழ்க்கை வரலாறு படமானால் அதற்கு என்ன பெயர் வைக்கலாம்?', என்று கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்து அவர் கூறுகையில், 'என் வாழ்க்கை கதையை படமாக்கினால், அதற்கு 'பிப்டி ஷேட்ஸ் ஆப் பல்லவி' என்றுதான் பெயர் வைப்பேன். ஏனென்றால், நாம் எல்லாரிடமும் ஒரே மாதிரி பழகுவது கிடையாது. நானும் அப்படித்தான்.

நண்பர்களுடன் ஒரு மாதிரியும், உறவினர்களிடம் வேறு மாதிரியும், பெற்றோருடன் இன்னொரு மாதிரியும் இருப்பேன். இப்படி நிறைய முகங்கள் எனக்கு உண்டு. எனவேதான் இந்த பெயரை வைக்க ஆசைப்படுகிறேன்", என்றார்.

# "சினிமாவில் பெண்களுக்கு அது இருக்கத்தான் செய்கிறது" "டூரிஸ்ட் பேமிலி" பட நடிகை



சிகுமார், சிம்ரன் நடிப்பில் வெளியான "டூரிஸ்ட் பேமிலி" படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தவர் யோகலட்சுமி. இப்படம் ரூ.70 கோடிக்கு மேல் வசூவித்து சாதனைப் படைத்தது.

இந்நிலையில் நடிகை யோகலட்சுமி சினிமாவில் பெண்களுக்கு சிரமங்கள் இருப்பதாக கூறி இருக்கிறார். அவர் கூறுகையில்,

"சினிமாவில் பெண்களுக்கு சிரமங்கள் இருக்கத்தான் செய்கிறது. சிலர் தவறாக கேட்பதுபோன்றநிலைவந்துவிட்டாலும்நாம்எப்படிஇருக்கிறோமோஅப்படியேதான் இருக்க வேண்டும். வேண்டாம் என்று முடிவெடுத்தால் அந்த முடிவில் உறுதியாக இருக்க வேண்டும். அதுதான் முக்கியம்" என்றார்

யோகலட்சுமியின் இந்த பேச்சு தற்போது சமூக வலைத்தளங்களில் மிகவும் பாராட்டப்பட்டு வருகின்றது.

# விரைவில் தென்னிந்திய படங்களில் சவுந்தர்யா ஷர்மா?



பல் மருத்துவராக இருந்து தற்போது நடிகையாக மாறி இருப்பவர் சவுந்தர்யா ஷர்மா. பிக் பாஸ் 16ல் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கிய பிறகு, தற்போது அவர் "ஹவுஸ்புல் 5" என்ற நகைச்சுவை பொழுதுபோக்கு திரைப்படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமாகி இருக்கிறார்.

இந்தப் படத்தில் "லூசி" என்ற கேரக்டரில் நடிகை சவுந்தர்யா ஷர்மா நடித்து நல்ல வரவேற்பு பெற்றார். இந்நிலையில், 'தென்னிந்திய மொழி படங்களில் நடிப்பதும் எனது முக்கிய கனவுகளில் ஒன்று' என்று கூறியுள்ளார். இதன் மூலம் விரைவில் அவர் தென்னிந்திய சினிமாவில் நடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# "நம்மில் யாரிடமும் ரூ. 3,000 கோடி படங்கள் இல்லை" ராஷ்மிகாவை புகழ்ந்த நாகார்ஜுனா

மும்பையில் நடைபெற்ற 'குபேரா' படத்தின் மூன்றாவது பாடலின் ஆடியோ வெளியீட்டு நிகழ்வின்போது, நடிகர் நாகார்ஜுனா, நடிகை ராஷ்மிகா மந்தனாவைப் புகழ்ந்தார்.

சேகர் கம்முலா இயக்கத்தில் தனுஷ், நாகார்ஜுனா மற்றும் ராஷ்மிகா மந்தனா நடிப்பில் உருவாகி இருக்கும் 'குபேரா' திரைப்படம், வருகிற 20ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இப்படத்தின் மூன்றாவது பாடலான 'பீப்பி பீப்பி டும் டும் டும்' பாடல் வெளியீட்டு விழா மும்பையில் நடைபெற்றது. அப்போது நாகார்ஜுனா, ராஷ்மிகாவை புகழ்ந்து பேசினார்.

அவர் கூறுகையில், " திறமையின் பவர்ஹவுஸ் ராஷ்மிகா மந்தனா. கடந்த மூன்று ஆண்டுகளில் வெளியான அவரது திரைப்படங்களை பாருங்கள். நம்மில் யாரிடமும் ரூ. 2000 முதல் 3000 கோடி வசூல் செய்த படங்கள் இல்லை. அவர் நம் அனைவரையும் மிஞ்சி இருக்கிறார்" என்றார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட துறைகளில் வெளியான ராஷ்மிகா மந்தனாவின் படங்களின் பாக்ஸ் ஆபீஸில் பல சாதனைகள் படைத்திருப்பதை இது காட்டுகிறது.

# ஆர்சிபி அணியை விற்க உரிமையாளர் முடிவு..? ரசிகர்கள் அதிர்ச்சி



அண்மையில் முடிவடைந்த 18வது ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி 6 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் கிங்சை தோற்கடித்து முதல் முறையாக சாம்பியன் பட்டத்தை தட்டிதூக்கியது.

ஐ.பி.எல். அறிமுகம் ஆன 2008ம் ஆண்டில் இருந்தே ஆடிவரும் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்கு முதல் 17 ஆண்டுகள் பெருத்த ஏமாற்றமாக அமைந்தது. ஒரு கோப்பையை கூட வெல்லவில்லை. இதனால் அந்த அணி பல விமர்சங்களை எதிர்கொண்டது. இருப்பினும் அந்த அணிக்கு ரசிகர்கள் அதிகமாகி கொண்டே சென்றதே தவிர குறையவில்லை.

இந்நிலையில் அந்த அணியின் 18 ஆண்டு கால ஏக்கம் இந்த ஐ.பி.எல். சீசனோடு தணிந்தது. ஐ.பி.எல். வரலாற்றில் முதல் கோப்பையை கைப்பற்றி அசத்தியது. இந்த வெற்றியை அணியின் வீரர்கள் மட்டுமின்றி பல ரசிகர்களும் வெறித்தனமாக கொண்டாடி தீர்த்தனர்.

இருப்பினும் ஆர்சிபி அணியின் வெற்றியை கொண்டாட பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விழாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலியானார்கள். இந்த சம்பவம் நாட்டையே உலுக்கியது. இதனால் ஆர்சிபி அணி மீது ஏகப்பட்ட விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை விற்க அதன் உரிமையாளர் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. முதல் வெற்றி, பிராண்ட் மதிப்பு உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு அணியின் உரிமையாளரான டயாஜியோ பிஎல்சி, ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர்சிபி) ஐபிஎல் உரிமையை விற்பது குறித்து பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

டயாஜியோ நிர்வாகம் ஆர்சிபி அணியின் முழு அல்லது பகுதி உரிமையை விற்க திட்டமிடுவதாகவும், இதற்கு 2 பில்லியன் டாலர் வரையில் (இந்திய மதிப்பில் ரூ.16,834 கோடி) மதிப்பீட்டை எதிர்பார்ப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இருப்பினும், இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என கூறப்பட்டுள்ளது.

இது அந்த அணியின் ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# இங்கிலாந்தில் விளையாடும் வாய்ப்பை பெற்ற கெய்க்வாட்.. சிஎஸ்கே ரசிகர்கள் மகிழ்ச்சி



இந்திய கிரிக்கெட் அணியின் வளர்ந்து வரும் இளம் நட்சத்திர வீரர் ருதுராஜ் கெய்க்வாட். இந்திய அணிக்காக 23 டி20 போட்டிகளிலும், 6 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடி உள்ளார். இந்திய அணியில் கிடைக்கும் வாய்ப்புகளில் ஓரளவு அசத்தி வரும் அவர் நிலையான வாய்ப்பு கிடைக்க போராடி வருகிறார்.

ஐ.பி.எல். தொடரில் அசத்தலான செயல்பாட்டை வெளிப்படுத்தி வரும் அவர் தோனிக்கு பிறகு சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டார். இதனால் சிஎஸ்கே ரசிகர்கள் மத்தியில் இவருக்கென்று தனி பட்டாளம் உண்டு. இருப்பினும் காயம் காரணமாக இந்தாண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் சில லீக் போட்டிகளில் மட்டுமே விளையாடிய நிலையில் விலகினார்.

தற்போது காயம் சரியான நிலையில் இங்கிலாந்துக்கு சென்றுள்ள இந்திய ஏ அணியில் இடம்பெற்றுள்ளார். இருப்பினும் அங்கு நடைபெற்ற இங்கிலாந்து லயன்சுக்கு எதிரான 2 போட்டிகளிலும் அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இது அவருக்கு பெரிய ஏமாற்றமாக அமைந்தது.

இந்நிலையில் இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட்டில் விளையாடும் வாய்ப்பு அவருக்கு கிடைத்துள்ளது. கவுண்டி கிரிக்கெட்டில் யார்க்ஷயர் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அடுத்த மாதம் தொடங்கும் சாம்பியன்ஷிப் தொடருக்கு முன்னதாக அவர் யார்க்ஷயர் அணியுடன் இணைய உள்ளார்.

இது சிஎஸ்கே ரசிகர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.